**போக்குவரத்துச் செயற்திட்ட தயார்படுத்தல் வசதி -கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்திக்கான சாத்தியவள ஆய்வுக்கான ஆலோசனை சேவை செயற்திட்டம் - 2022**

---

போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதி - கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்திக்கான சாத்தியவள ஆய்வுக்கான ஆலோசனை சேவை செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஒக்தோபர் 28 ஆம் திகதிய 3425-எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், துறைமுகங்கள் , கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் முன்னுரிமை போக்குவரத்து செயற்திட்டங்களின் தயார்நிலையை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளதுடன் கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட நிர்வாக கைநூலின் பிரகாரம் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது தேசிய துறைமுக பிரதான திட்டத்தை பின்பற்றி துறைமுக வசதிகளின் அபிவிருத்திக்கான தயார்படுத்தலிற்கு ஆதரவளிக்கின்றது.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 729.65 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5 மில்லியனானதுடன் அதில் ரூபா 645.01 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 4.42 மில்லியன் தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 84.64 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

செயற்திட்ட நடவடிக்கைகள் 2020 பெப்ரவரி 24 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2021 மே 23 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், திட்டத்தின் நடவடிக்கைகள் முடிவடையும் திகதி 2023 மே 31 வரை நீடிக்கப்பட்டது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்தி செயறதிட்டத்திற்கான சாத்தியவள ஆய்வுக்கான ஆலோசனை சேவை மற்றும் இதன் விரிவான பொறியியல் என்பன 2020 ஆம் ஆண்டின் 2வது காலாண்டு பகுதியளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் , பெறுகை நடைமுறையில் காணப்பட்ட தாமதம் காரணமாக வரையறுக்கப்பட்ட ஏஇசிஓஎம் உட்கட்டமைப்பு மற்றும் சூழல் யூகே நிறுவனத்திற்கு ஒப்பந்தமானது 2020 பெப்ரவரி 24 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் இத்திகதியிலிருந்து 15 மாதங்களுக்குள் ஒப்பந்தமானது பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. ஒப்பந்தத்தின் கீழ் நடவடிக்கைகள் பட்டியலிடப்பட்ட படி 2021 மே 23 வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2023 மே 31 வரை நான்கு நீடிப்புக்களும் வழங்கப்பட்டிருந்தன. 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த ஆலோசனை ஒப்பந்த செயன்முன்னேற்றம் 95 சதவீதமாக இருந்ததுடன் இறுதி அறிக்கை கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக 2023 மார்ச் 31 வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் நிர்ணயிக்கப்பட்ட செயன்முன்னேற்றத்தை அடைய முடியவில்லை.

### 2.2 குறைபயன்பாடுடைய வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வளரின் பரிந்துரை |
|---|---|---|
| துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் வருடாந்த பாதீட்டின் ஊடாக மீளாய்வாண்டிற்காக ஜீஓஎஸ்எல் மற்றும் ஏடிபி செலவினங்களின் கீழ் செயற்திட்ட செலவுகளுக்காக மொத்தம் ரூபா 824 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 552 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. | அறிக்கைகள் மைல்கற்கள் கொடுப்பனவின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இறுதி ஈஐஏ அறிக்கை பெறப்பட்ட பின்னர் இறுதிக் கொடுப்பனவுகள் விடுவிக்கப்படும். | வருடத்தில் செய்யப்படக்கூடிய செயற்பாடுகளை கருத்திற்கொண்டு வருடாந்த மதிப்பீடு தயாரக்கப்பட வேண்டும். |